1999 மே 18]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அனுமதியை நான் உங்களுக்குக் கொடுக்கவில்லை.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன சொல்கிறேன் என்றால், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காரவில்லை என்றால், உங்களை நான் வெளியேற்றுவேன். அதைத் தவிர வேறு வழியில்லை. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி அவையை விட்டு வெளியேறவும். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பேட்டில் ஏறாது. டாக்டர் கிருஷ்ணசாமி அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன் அல்லவா? அவைக் காவலர்கள் டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்ற வேண்டும்.

(அவைக் காவலர்கள் டாக்டர் க. கிருஷ்ணசாமி அருகே வந்தனர்)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எது கேட்டாலும், உங்களுக்கு நான் அனுமதி கொடுக்காதபோது நீங்கள் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) அவைக் காவலர்கள் டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்ற வேண்டும்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்)

(ஆ) திரு. தாமரைக்கனி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை

திரு. பி.ஆர் சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே....

** **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? நீங்களும் வெளியே போக வேண்டுமா?

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. தாமரைக்கனி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை பற்றி என்னுடைய அறையில் வந்து கேட்டீர்கள். இதற்குமேல் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கோரிக்கை சொல்லுங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்களும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார். அது என்னவென்றால் கோயம்புத்தூரில் ரயில் மறியலுக்காக...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று கடைசி நாள் என்பதால் விதிகளை மாற்ற முடியாது. சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகளை ஏராளமான உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை 55-க்கும் மேலே இருக்கின்றன. எடுத்து விவாதிக்கப்பட்ட தீர்மானங்கள் போக, மீதமிருக்கின்ற தீர்மானங்களுக்கான பதில்கள் எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திரு வி.கே. லட்சுமணனுக்கு என்று தனிச் சலுகை அளிக்க முடியாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: இன்றைக்கு என்னவென்றால், அங்கே தொழிலாளர்கள் அத்தனை பேரும் சேர்ந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் தெரியும். எப்படி இருந்தாலும், அதற்கென்று தனியாக அனுமதி கொடுக்க முடியாது.